**சுருக்கம்**

நெடுஞ்சாலை–இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய அலகில் இணைத் தலைமைப் பொறியாளர், துணைத் தலைமைப் பொறியாளர் (கோட்டப் பொறியாளர் நிலையில்), உதவித் தலைமைப் பொறியாளர் (உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்) மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர் ஆகியோர் பதவிகளின் பெயர்கள் மாற்றம்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண். 200 நாள். 13.12.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம் கார்த்திகை மாதம் 27 ஆம் நாள்.

படிக்கப்பட்டது

1. அரசு ஆணை (நிலை) எண். 293, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை, நாள். 12.10.2010.
2. அரசாணை (நிலை) எண். 152, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.ஆர்.1) துறை, நாள். 04.10.2013.
3. இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களின் கடித எண். 10/2013/பி2, நாள். 24.10.2013.

-----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பதவியானது தலைமைப் பொறியாளர் (நெ), தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நடைமுறையில் இருந்து வந்தது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தலைமைப் பொறியாளர் (நெ), தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி, சென்னை–25 பதவியினை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண். 293, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே3) துறை நாள். 12.10.2010–இல் இயங்கும் கீழ்க்கண்ட பதவியிடங்களையும் பெயர் மாற்றம் செய்யுமாறு இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்கள்அரசை கோரியுள்ளார்.

| வ.எண் | ஒப்பளிக்கப்பட்ட பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பதவியின் எண்ணிக்கை | பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய பதவி |
|---|---|---|---|
| 1 | இணைத் தலைமைப் பொறியாளர் | 1 | இணை இயக்குநர் |
| 2 | துணைத் தலைமைப் பொறியாளர் (கோட்டப் பொறியாளர் நிலையில்) | 4 | துணை இயக்குநர் |
| 3 | உதவித் தலைமைப் பொறியாளர் (உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்) | 12 | உதவி இயக்குநர் |
| 4 | <u>**மண்டல ஆய்வகங்கள்**</u><br><br>உதவிக் கோட்டப் பொறியாளர் | 8 | உதவி இயக்குநர் |

4. இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றம் செய்து, அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண். | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் பெயர் அதன் ஊதிய விகிதம் + தர ஊதியம் விவரம் | எண்ணிக்கை | திருத்தியமைக்கப்படும் பெயர் அதன் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|
| 1 | இணை தலைமைப் பொறியாளர்<br>ரூ. 37400–67000+8700/– | 1 | இணை இயக்குநர்<br>(கண்காணிப்புப் பொறியாளர் நிலையில்)<br>ரூ.37400–67000+8700/– |
| 2 | துணை தலைமைப் பொறியாளர் (கோட்டப் பொறியாளர் நிலையில்)<br>ரூ.15600–39100+7600/– | 4 | துணை இயக்குநர்<br>(கோட்டப் பொறியாளர் நிலையில்)<br>ரூ.15600–39100+6600/– |
| 3 | உதவி தலைமைப் பொறியாளர் (உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்)<br>ரூ.15600–39100+6600/– | 12 | உதவி இயக்குநர்<br>(உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்)<br>ரூ.15600–39100+5400/– |

| | | | |
|---|---|---|---|
| 4 | 8 மண்டல ஆய்வகங்களில் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர் ரூ.15600–39100+6600/– | 8 | உதவி இயக்குநர் (உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில்) ரூ.15600–39100+5400/– |

5. மேற்கண்ட பெயர் மாற்றம் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டது.

"பணியிடங்களின் பெயர் மாற்றம் செய்வதால் பிற துறைகளில் இப்பணியிடங்களின் பெயர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதத்தினை கோருதல் கூடாது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 466/Joint Secretary to Government (Dr.P.U)/13/பொ.ப.1/2013, நாள். 06.11.2013–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை–25.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை.
அனைத்து பிரிவுகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
நிதி (பொ.ப.I) துறை, சென்னை–9.

நகல்
மாண்புமிகு அமைச்சர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.